1993 மார்ச் 23)

பரமக்குடியில் அந்தப் பிரிவுகள் ஆரம்பிக்கும் எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.

(முற்பகல் 10–50)

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஏழை எளிய மக்களை வாழ்விக்க பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பவனி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டாவது அங்கே ஆரம்பிப்பார்களா? அங்கே இடம் இருக்கிறது. பரமக்குடியில் கட்டிடம் இருக்கிறது. அரசுக்கு அந்த டிரேடுகளை ஆரம்பிக்கும் செலவுதான் ஏற்படும். இடம் வாங்குவதற்கோ, கட்டிடங்கள் கட்டுவதற்கோ தனியாக செலவு ஏற்படாது. 30 ஏக்கர் நிலம் தனியாக அரசின் சார்பில் இருக்கிறது. அவ்வாறு இருக்கும் இடத்திலே ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டிலாவது பரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நிதி நிலைமை இடம் கொடுத்தால் வரும் ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 155, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

155—

திருச்சி வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களுக்கு அடுக்கு மாடிக் கட்டிடம்.

*13840—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி நகரத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்கு வேளாண்மைப் பொறியியல் பயிற்சி மையத்தில் போதிய இட வசதி உள்ளதால் அடுக்கு மாளிகை (Multi-storeyed Building) கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

|1993 மார்ச் 93

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி நகரில் வேளாண்மைப் பொறியியல் துறை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட பயிற்சி மைய வளாகத்தில் போதிய இட வசதியிருந்தும் நிதி நெருக்கடி காரணமாக இதுவரை செயற்படுத்த முடியவில்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் மட்டும் வேளாண் பொறியியல் துறையில் 12 அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 2 அலுவலகங்கள் மட்டுமே அரசின் சொந்தக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன. தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வரும் இதர 10 அலுவலகங்களுக்காக அரசு மாதந்தோறும் சுமார் 20,000 ரூபாய் வாடகையாகச் செலுத்தி வருகின்றது. மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக வேளாண்மைத் துறை பயிற்சி மையத்தில் போதிய இட வசதியிருந்தும் செயல்படுத்த முடியவில்லை என்று கூறியுள்ளார். ஆதலால் அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நிதி நிலைக்கு ஏற்ப தன்மையின் அடிப்படையில் அது பரிசீலிக்கப்படும்.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தான் வேளாண்மைத் துறையில் வாழை ஆராய்ச்சி மையம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி மையம் என்று பல ஆராய்ச்சி மையங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. தற்போது மிக வேகமாக உருவாகி வரும் அக்ரோ பேஸ்டு இண்டஸ்ட்ரீஸ் மூலம் அந்த ஸ்கீம்கள் மேலும் வளரும் வண்ணம் வேளாண் பொறியியல் துறையில் வேறு ஏதேனும் பயிற்சி மையம் புதிதாகத் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர்களுக்கு வேளாண் கருவிகளை இயக்குவதற்கும், அந்தக் கருவிகளைப் பழுது

பார்ப்பதற்கும் தமிழகத்தில் புதிய கருவிகளைத் தயாரிக்கக் கூடிய நிறுவனங்கள் அந்தக் கருவிகளினுடைய தகுதிச் சான்றிதழ் பெறுவதற்காக இதுவரை ஆந்திர மாநிலம், மத்தியப் பிரதேசம் மாநிலம், ஒரிஸ்ஸா மாநிலம், அஸ்ஸாம் மாநிலம் ஆகிய நான்கு மாநிலங்களில் உள்ள தொழிற் சாலைகளுக்குச் சென்று, அங்கே பயிற்சி மற்றும் தகுதி சான்றிதழ் பெற்று வருகிறார்கள். இதை அறிந்த நம் முடைய தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஐந்தாவதாக தமிழகத்திற்கு ஒரு வேளாண் தொழில் மையம் வரவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தினார்கள். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசு வருகின்ற நிதி ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 4 கோடி ரூபாய் திட்டத்தில் புதிய வேளாண் தொழிற் கல்விக்குப் பயிற்சியும், பழுது பார்ப்பதற்கு உரிய வேளாண் பொறியியல் நிறுவனத்தையும் அமைக்க இருக்கிறது என் பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தஞ்சை மாவட்டத் திற்கு அடுத்தாற்போல் திருச்சி மாவட்டம் தான் உணவு உற்பத்தியில் மிகவும் முன்னணி வகிக்கின்றது. ஆகவே வருகின்ற நிதி ஆண்டிலாவது வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் வேளாண் துறை அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் பெர்மனன்ட் ஸ்டரக்சர்ஸ் கட்ட மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-55)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 156, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.